2019 ஜூலை 11]

ஆய்வு செய்து கொண்டிருக்கின்றோம். அப்படி ஆய்வு செய்து எங்கெல்லாம் தொழிற்சாலைகள் இருக்கின்றனவோ, அதற்கும் போதிய அளவு மின்சாரம் கொடுக்க வேண்டுமென்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய எண்ணம். ஆக, இந்த அடிப்படையிலே துணை மின் நிலையமாக இருந்தாலும் சரி, மின் மாற்றிகளாக இருந்தாலும் சரி இந்த இரண்டு ஆண்டு காலத்தில் வேண்டிய அளவிற்கு நாங்கள் செய்து கொண்டிருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையையும் பரிசீலித்து, உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 83, மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம், மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

83—

உயர்மட்டப் பாலம்

***1924—திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, ஆவிளிப்பட்டி கிராமம், பெருமாயூரிலிருந்து, வீரசின்னம்பட்டி சாலையில் சந்தானவர்த்தி ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ்.பி வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

நத்தம் சட்டமன்றத் தொகுதி, ஆவிளிப்பட்டி கிராமம், பெருமாயூரிலிருந்து, வீரசின்னம்பட்டி சாலையில் சந்தானவர்த்தி ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டுவது குறித்து பெறப்பட்ட கருத்துருவின்மீது, ஊரக வளர்ச்சி இயக்குநரின் பரிந்துரையைப் பெற்று, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய கனிவான பார்வைக்குக் கொண்டு

சென்று பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம் அவர்கள்.

திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கழகத் தலைவரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான தளபதியை வணங்குகிறேன். நத்தம் தொகுதி, ஆவிளிப்பட்டி கிராமம், பெருமாயூரிலிருந்து மஞ்சநாயக்கன்பட்டி, ராவலாபுரம், பண்ணைப்பட்டி, ராசக்காபட்டி, சிலுவத்தூர், கம்பளியம்பட்டி, நடூர் ஊராட்சி வழியாக, கல்லூரி மாணவர்கள் உயர் கல்வி படிப்பதற்கும், விவசாயிகள் விவசாயம் செய்த பொருட்களை திண்டுக்கல்லுக்கு கொண்டு செல்வதற்கும் இந்தப் பாலம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். பொது மக்களுக்குப் பயன்படும் இந்தப் பாலத்தை கட்டித்தர அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. எஸ்.பி வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட நத்தம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அந்தப் பாலத்தை 45 மீட்டர் நீளத்தில் உயர்மட்டப் பாலமாக கட்டித்தர மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய கனிவான பார்வைக்குக் கொண்டு செல்லப்படும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. மேலும், எங்களுடைய துறை சார்பாகவும் பல்வேறு திட்டங்களுக்கான அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. நபார்டு திட்டத்தின் மூலமாகவோ, ஊரக வளர்ச்சித் துறையினுடைய ஊரக சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாகவோ அல்லது வேறு எந்த

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

2019 ஜூலை 11]

திட்டத்தின் மூலமாகவோ மேற்குறிப்பிட்ட பணிகள் கண்டிப்பாக எடுத்துச் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆவிளிப்பட்டி, களத்துப்பட்டி, பெருமாயூர் மற்றும் வீரசின்னம்பட்டி ஆகிய கிராமங்களை இணைக்கும் வகையில் அந்த உயர்மட்டப் பாலம் அமைய உள்ளது. இந்தப் பாலம் அமைக்கப்படுவதன்மூலம், பெருமாயூர் கிராமத்தில் வசிக்கும் 350 மக்களும், வீரசின்னம்பட்டி கிராமத்தில் வசிக்கும் 1,910 மக்களும், களத்துப்பட்டி கிராமத்தில் வசிக்கும் 931 மக்களும் பயன் பெறுவார்கள் என்பதைத் துறை அதிகாரிகள் தங்களுடைய ஆய்வின் மூலமாகத் தெரிவித்துள்ளார்கள். அது முக்கியமான பாலம் என்றுதான் நானும் நினைக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுசெல்லப்பட்டு, அந்தப் பாலம் கண்டிப்பாக கட்டித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம் அவர்கள்.*

திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுசென்று உயர்மட்டப் பாலம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்ததற்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

நத்தம் தொகுதி, சானார்பட்டி ஒன்றியம், சானார்பட்டி ஊராட்சி, கோனப்பட்டி அருகே பெரிய தடுப்பணையும், நத்தம் ஒன்றியம், திருமணிமுத்தாற்றின் குறுக்கே காட்டு பெரியகுளத்திற்கு தண்ணீர் செல்வதற்கு தடுப்பணையும், கோசுகுறிச்சி ஊராட்சி, பாலாத்து குளத்திற்கு புதிய தடுப்பணையும், ரெட்டியப்பட்டி ஊராட்சி, காசம்பட்டி அருகே இலுவன்குட்டையில் அணையும், சின்ன அருவி அருகே அணையும் கட்டினால் நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக உயரும் என்பதால், மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அணைகள் மற்றும் தடுப்பணைகளைக் கட்டித்தருவதற்கு இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

பழனியிலிருந்து தாராபுரம் செல்கின்ற சாலையில் மானூரிலிருந்து அய்யம்பட்டி செல்கின்ற சண்முகநதி ஆற்றின்

குறுக்கே ஒரு பாலம் கட்டித்தர மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்வேறு கோரிக்கைகளை இங்கே வைத்துள்ளார். தடுப்பணைகள், உயர்மட்டப் பாலம், சாலைகளை மேம்படுத்துவது குறித்த மூன்று கோரிக்கைகளை இங்கே வைத்துள்ளார். ஆறுகளின் குறுக்கே தடுப்பணைகள் கட்டுவது குறித்த பணிகள் பொதுப் பணித் துறையின் மூலமாகத்தான் மேற்கொள்ளப்படும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு அது கொண்டு செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, எங்களுடைய துறையின் மூலமாக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் மூலமாகப் பல்வேறு சிறிய, சிறிய தடுப்பணைகள் கட்டப்பட்டிருக்கின்றன. தனியாக இருக்கக்கூடிய இடங்கள், விவசாயிகளின் இடங்கள், சிறிய சிறிய பள்ளங்கள் போன்றிருக்கக்கூடிய இடங்கள், சிறிய ஆறுகள் இருக்கக்கூடிய பகுதிகளில்கூட தடுப்பணைகள் கட்டப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இடங்கள் அப்படியிருந்தால் கண்டிப்பாக எங்கள் துறை மூலமாகவே நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய தொகுதியில் சில இடங்களில் சாலைகள் போடப்பட வேண்டுமென்றும், உயர்மட்டப் பாலம் அமைக்கப்பட வேண்டுமென்றும் கோரியுள்ளார். அதுகுறித்து துறை அதிகாரிகளின் ஆய்வறிக்கைகளைப் பெற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2019 ஜூலை 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 84, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. சத்யா, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

84—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***17111—திருமதி ப. சத்யா:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி நகரில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. சத்யா அவர்கள்.*

திருமதி ப. சத்யா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கத் தாரகை மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். தமிழக மக்களுக்கு நல்வாழ்வு தருவதையே தனது இலட்சியமாக்கிக் கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஐயா எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். கண்ணை மூடுகின்ற கடைசி நிமிடம் வரை இந்த மண்ணை ஆண்டு, தமிழக மக்களின் கண்ணிலும், கருத்திலும், கையளவு இதயத்திலும் இடம் பிடித்த வெற்றித் தாயின் விவேக நல்லாட்சியில், பண்ருட்டியிலிருந்து எத்திசை சென்றாலும் 30 கிலோ மீட்டர் கடந்துதான் கல்லூரிக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. எனது தொகுதியிலிருந்து விழுப்புரத்திற்கோ, கடலூருக்கோ, நெய்வேலிக்கோ, சிதம்பரத்திற்கோ அல்லது*

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS